# நாம் கற்போம்

பாடம் 1

மனித தேவைகளுள் கல்வியும் ஒன்றாகும். கல்வி கற்காதவர் தனது அறிவை வளர்த்துக் கொள்ள முடியாது. தனது வாழ்க்கையைச் சீராக நடத்தவும் முடியாது. ஆதலால், இஸ்லாம் முஸ்லிமான ஆண், பெண் இருபாலார் மீதும் கல்வி கற்பதைக் கடமையாக்கி இருக்கின்றது

"கற்பவனாக இரு; கற்பிப்பவனாக இரு; கற்பவனுக்கு உதவுபவனாக இரு; நான்காமவனாக இருந்து விடாதே" என நபி(ஸல்) அவர்கள் போதித்துள்ளார்கள். மனிதன் எப்போதும் கல்வியோடு தொடர்புடையவனாக இருக்க வேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

கற்பது அல்லாஹ்வினாலும், அவனது ரஸூலினாலும் ஏவப்பட்ட ஒரு காரியமாகும். ஆதலால், அதனை ஓர் இபாதத் - வணக்கம் என்போம். அந்த இபாதத்தைச் செய்வதால் அல்லாஹ்விடத்தில் எமக்கு நன்மை கிடைக்கும். ஆதலால், கற்பதை முறையாகக் கற்க வேண்டும்.

சுத்தமாக இருத்தல், விருப்பத்தோடு கற்றல், படிமுறையாகக் கற்றல், ஒழுங்காகக் கற்றல், தினமும் கற்றல், உரிய நேரத்தில் கற்றல் என்பன கற்கின்ற சில ஒழுங்குகளாகும். பிறருடன் சேர்ந்து கற்பதும், கலந்துரையாடிக் கற்பதும், மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதும்

கற்றலில் விருத்தியை உண்டாக்கும். கற்பதற்காக நல்ல நூல்களைத் தேர்ந்தெடுப்பது, நண்பர்களையும், சகோதரர் களையும் இணைத்துக் கொள்வது போன்றன நல்ல பழக்கங்களாகும்.



கற்பவர்கள் ஆசிரியர்களை கௌரவிக்க வேண்டும். அவர்களுடன் மென்மையாகப் பேச வேண்டும். பணிவுடன் நடந்து கொள்ள வேண்டும். ஆர்வத்துடன் கேட்டுக் கற்றுக் கொள்ள வேண்டும். படிக்கின்ற நேரத்தில் மட்டுமன்றி, எல்லா நேரங்களிலும் அவர்களை கௌரவிக்க வேண்டும்.

"பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்" என்று கூறிக் கற்பதை ஆரம்பிக்க வேண்டும். "ரப்பிஸித்னி இல்மா" - "இறைவனே எனது அறிவை விருத்தியாக்குவாயாக" என்று அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். முஸ்லிமாக வாழ்வதற்கே கற்றுக் கொள்கிறேன் என்ற நல்ல எண்ணம் கொள்ள வேண்டும். எமக்குத் தெரிந்ததை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது போல, எம்மிட மிருக்கும் உபகரணங்களையும் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும். புத்தகம், கொப்பி, பென்சில், பேனா போன்ற உபகரணங்களைச் சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்திருக்க வேண்டும். கற்றவற்றை அடிக்கடி மீட்டிக் கொள்ள வேண்டும். அவற்றை நடைமுறைப்படுத்தவும் வேண்டும்.

இவ்வாறான ஒழுக்கங்களைப் பின்பற்றினால் எமது அறிவு விருத்தியாவதோடு அல்லாஹ்வின் அருளும் எமக்குக் கிட்டும்.

**கற்பதை வழமையாக்கிக் கொள்வோம்.**
**கற்றபடி செயற்படுவோம்.**

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களில் சரியானவற்றிற்கு "சரி" எனவும், பிழையானவற்றிற்கு "பிழை" எனவும் கட்டத்தினுள் எழுதுங்கள்**

1. எமக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களை நாம் கண்ணியத்துடன் மதிக்க வேண்டும். ☐

2. எமது பேனா, பென்சில், புத்தகம் போன்றவற்றை ஏனைய சகோதர மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. ☐

3. அல்லாஹ்வுக்காகவே என்ற எண்ணத்துடன் கல்வி கற்கும்போது அது இபாதத் ஆகும். ☐

4. ஒரு முஸ்லிம், கற்பவனுக்கு உதவி செய்பவனாக இருத்தல் மட்டும் போதுமானது. ☐

5. முஸ்லிம் ஆண்கள் மட்டுமே கல்வி கற்க வேண்டும். ☐

6. "அல்லாஹ்வே எனது அறிவை விருத்தி யாக்குவாயாக" என்று நாம் பிரார்த்திக்க வேண்டும். ☐